திராவிடத்தால் வாழ்கிறோம்

1062

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்



- வாழ்வோம்

உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

142

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த மைனர் மோசஸ் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

மைனர் மோசஸ் : சிறைக்கு அஞ்சாத சிறுத்தை!

1965-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதத்தில், தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு, தமிழ் மக்களின் அழைப்பை ஏற்றுச் சென்று வந்த பேரறிஞர் அண்ணாவுக்கு, சென்னையில் மிகப் பிரமாண்டமான வரவேற்பு அளித்தனர் கழகத்தினர்.

கடற்கரையில் மாபெரும் பொதுக் கூட்டத்துக்கு, ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் அழைத்து வரப்படுகிறார் அண்ணா. வாகனப் பேரணி, சைக்கிள் பேரணி பின் தொடர, முன்னால் கம்பீரமாக அணிவகுத்துச் சென்ற யானையில் அமர்ந்து, கழகத்தின் கருப்பு சிவப்புக் கொடியை ஏந்தி வந்தனர் இருவர். ஒருவர் கழகத்தோழர் அ.செல்வராசன், மற்றொருவர் மைனர் மோசஸ். கழகத்தின் மாநகராட்சி மன்ற உறுப்பினராக இருந்தவர், சென்னை மாநகராட்சியின் மேயராக செயல்பட்டவர். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நெருக்கமான பாசத்துக்குரிய தம்பி.

முத்தமிழறிஞர் போற்றிய உடன்பிறப்பு

"சிரித்த முகம், செம்மாந்த நோக்கு, சிங்கத்தின் நடை, உடையணிந்து காட்சி தந்தால் ஒரு ராஜ கம்பீரம், இத்தனைக்கும் மேலாக உள்ளமோ கள்ளமொன்றில்லாத தூய்மையின் இருப்பிடம்! தும்பை மலர்" எனக் கலைஞர் புகழாரம் சூட்டிய கழக முன்னோடி.

சென்னை சட்டக்கல்லூரி மாணவராக இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஒருங்கிணைத்த முன்னணி செயல்வீரர்களில் ஒருவர் மைனர் மோசஸ். சென்னைக்குப் பட்டம் பெற வந்து, சென்னைவாசியாகவே மாறியவர். சென்னை ஓட்டேரி பகுதியில் கழகக் கிளையில் இணைத்துக்கொண்டு செயல்பட்டவர். தலைமைக் கழகம் அறிவிக்கும் அத்தனை போராட்டங்களிலும் முன்னணியில் நின்ற தளகர்த்தர். சென்னை நகரத்தில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர் எனக் கலைஞரால் பாராட்டப்பெற்றவர். நாள் தவறாமல் மாலைநேரங்களில் பேரறிஞர் அண்ணாவையும் கலைஞரையும் சந்திக்கும் வழக்கத்தைக் கொண்டவர் மைனர் மோசஸ் என அவரது காலத்தைச் சேர்ந்த கழகத்தினர் குறிப்பிடுகின்றனர்.

மாநகராட்சி மேயர்

விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் என 1960-களில் கழகத்தின் களப்போராட்டங்களில் கடும் அடக்குமுறைகளைச் சந்தித்தவர். 1965-ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சி மன்றத்தின் மேயராக மைனர் மோசஸ் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஓராண்டு காலம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, ஏராளமான மக்கள் நலப் பணிகளைச் செய்துள்ளார்.

1966-ஆம் ஆண்டு, ஜனவரியில் ரயில்வே தொழிலாளர் சங்கத்தின் ஒன்பதாவது மாநில மாநாடு, சென்னையை அடுத்த செங்குன்றத்தில் கழகத்தின் ஆதரவுடன் நடைபெற்றது. அப்போது, சென்னை மாநகர மேயரான மைனர் மோசஸ், தமிழ்நாடு முழுவதிலும் இருந்து வருகை தந்த தொழிற்சங்கத்தினருக்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தார் என 'அண்ணா சில நினைவுகள்' நூலில் குறிப்பிடுகிறார் கவிஞர் கருணானந்தம்.

1966-ஆம் ஆண்டில், மைனர் மோசஸ் அவர்களின் ஏற்பாட்டில், திரு.வி.க.நகர் பகுதியில் ஒரு சமூக நலக்கூடம் கட்டப்பட்டு, அதை பெருந்தலைவர் காமராஜர் திறந்து வைத்துள்ளார். கடந்த ஆண்டு, அந்த இடத்தில் புதிய திருமண மண்டபத்தைக் கட்டி, அதன் திறப்பு விழா நிகழ்ச்சியில் இந்தத் தகவலை பெருமையுடன் பகிர்ந்து கொண்டார், இன்றைய கழகத் தலைவர் அவர்கள்.

ஆட்டுவிக்கும் வல்லமை பெற்றவர்

மாநராட்சியில், மைனர் மோசஸ் அவர்களின் பயணம் எப்படிப்பட்டது என்பதை 'நெஞ்சுக்கு நீதி'யில் குறிப்பிடும் கலைஞர். "மாநகராட்சி மன்றத்தை ஒரு விரலால் ஆட்டுவிக்கும் வல்லமை பெற்றவர்" என்கிறார்.

அண்ணாவுக்கு பிறகு, கலைஞர் முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்தபோது, சென்னை மாநகராட்சி மன்றத்தைப் பற்றிய புகார்கள் எழுந்து, அதை விசாரிப்பதற்காக ஒரு குழு போடப்பட்டது. அதுதொடர்பாக, சட்டமன்றத்தில் ஹண்டே பேசும்போது, "மாநகராட்சியைக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்த வேண்டும்" என்கிறார். அதற்கு பதிலளித்த முதலமைச்சர் கலைஞர், "மாநகராட்சி மன்றத்தின் மீது எழுந்துள்ள புகாருக்கு யார் காரணம் என்பதை அறிய இப்போதே விசாரணைக்கு உத்தரவிடுகிறேன்" என அறிவித்ததுடன், "மாநகராட்சி மன்றத்தை இதே நிமிடத்திலே கலைக்கிறேன்" என்று துணிந்து அறிவித்தார்.

> **"மோசஸ் அவர்களின் வரலாற்றை, வரலாறு தரும் பாடத்தை உணர்ந்து கொண்டால், எத்தனை எதிர்ப்பு வந்தாலும், அவற்றை எதிர்த்து நிற்கும் நெஞ்சுரம் கிடைக்கும்!"**

அந்த நிகழ்வு குறித்து குறிப்பிடுகையில், "அப்படிக் கலைக்கப்பட்ட மாநகராட்சி மன்றத்தில் இருந்தவர்கள் எல்லாம் சாதாரணமானவர்கள் அல்ல, ஜாம்பவான்கள். மாநகராட்சி மன்றத்தை ஒருவிரலால் ஆட்டி வைக்கக்கூடிய அளவுக்கு செல்வாக்கு பெற்றவர்கள்.

நிர்வாகத்தில் புலிகளாக, சிங்கங்களாக இருந்தவர்கள். அவர்களை விட்டால், மாநகராட்சி மன்றத்தை நிர்வகிக்க ஆள் இல்லை என்று சொல்கிற அளவுக்கு இருந்தவர்கள். என்னுடைய ஆருயிர் நண்பராக இருந்த மைனர் மோசஸ் போன்றவர்களை எல்லாம் ஒரே நாளில் மாநகராட்சி மன்றத்தைக் கலைத்ததன் மூலமாக வீட்டிற்கு அனுப்பி, அதன் மூலமாக கட்சிக்கு நான் சம்பாதித்துக் கொடுத்த மதிப்பு, மரியாதைதான் அடுத்த தேர்தலிலே தி.மு.க. வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்தது" என்று குறிப்பிட்டுள்ளார்.

நெஞ்சுரம் பெறும்!

1976-ஆம் ஆண்டு மிசா நெருக்கடியின்போது கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் கொடும் தாக்குதல்களுக்கு ஆளானவர். 1980-களில் கழகத்தின் பல்வேறு போராட்டங்களில், சென்னையில் முன்னெச்சரிக்கை கைது- போராட்டக் களத்தில் கைது எனப் பலமுறை சிறை சென்றவர். மைனர் மோசஸ் அவர்கள் மறைவின்போது, அந்த சிறை அனுபவங்களைக் குறிப்பிட்ட கலைஞர், "மைனர் மோசஸ் இருந்த சிறையில் நானும் இருந்தேன் என நினைத்து பெருமை கொள்வேன்" எனக் கூறி இருந்தார்.

1993-ஆம் ஆண்டு, கழகம் சிறு பிளவைக் கண்டிருந்த நேரத்தில், கழகத்தின் சின்னத்துக்கும், கொடிக்கும் நீதிமன்ற வழக்கு நடைபெற்று வந்த நாள்களில் மே மாதம் 20-ஆம் தேதி இயற்கை எய்தினார். கலைஞர் இரட்டைத் துயரத்துடன் தனது இரங்கலை வடித்திருந்தார்.

"சிறைச்சாலையில் உலவிய சிறுத்தை, கருப்புத் துண்டு அணிந்த தும்பை மலர்" என அவரது நினைவுகளுக்குப் புகழாரம் சூட்டினார். "மோசஸ் அவர்களின் வரலாற்றை, வரலாறு தரும் பாடத்தை உணர்ந்து கொண்டால், எத்தனை எதிர்ப்பு வந்தாலும், அவற்றை எதிர்த்து நிற்கும் நெஞ்சுரம் கிடைக்கும்" என அந்த உரையில் கலைஞர் குறிப்பிட்டார். அந்த வரலாறும் வார்த்தைகளும் கழகத்தின் வேராக, உரமாக நிலைத்து நிற்கும்.

...துடிக்கும்

துப்பாக்கி கலாச்சாரம், வலதுசாரிகளுக்குச் சிறப்பு அனுமதியா?

2014-ஆம் ஆண்டு பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு அமைந்த பிறகு, இந்தியாவில் துப்பாக்கி கலாச்சாரம் அதிகரித்துள்ளதை ஒன்றிய அரசு உச்சநீதிமன்றத்தில் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளது என மூத்த பத்திரிகையாளர் அரவிந்தாக்ஷன் பதிவிட்டுள்ளார். அவரது பதிவில் இருந்து...

"தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின்படி, கடந்த 7 ஆண்டுகளில் மொத்தம் 5 லட்சத்து 43 ஆயிரத்து 528 சட்டவிரோத துப்பாக்கிகள் இந்தியாவில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதில், தீவிரவாதிகள், நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகள் மற்றும் வடகிழக்கு மாநில கிளர்ச்சியாளர்களிடம் இருந்து 33 ஆயிரத்து 602 துப்பாக்கிகள் மட்டுமே பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மீதமிருக்கும் 5 லட்சத்து 9 ஆயிரத்து 926 சட்டவிரோத துப்பாக்கிகள் நாட்டில் மிகச் சாதாரணமாக உலவும் நபர்களிடம் இருந்தே பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பறிமுதல் செய்யப்பட்ட துப்பாக்கிகள் முறையாக அழிக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகமும் எழுகிறது. சட்ட விரோத துப்பாக்கி வைத்திருந்தனர் என இஸ்லாமியர்கள் மீதே அதிக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால், வலதுசாரி அமைப்பினர், பசு பாதுகாவலர் எனக் கூறிக்கொள்வோர் மீது இதே மாதிரியான நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்றால், நிச்சயம் இல்லை. இவர்கள் மீது ஒரே ஒரு வழக்கைக் கூட தேசிய புலனாய்வு முகமை இன்றைய தேதி வரை பதிவு செய்யவில்லை.

என்.சி.ஆர்.பி (NCRB)-ன் அச்சறிக்கையின் படி, இந்தியாவில் அதிகமாக சட்டவிரோத துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்படும் மாநிலங்கள் உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம்,ராஜஸ்தான், பீகார், ஹரியானா,மகாராஷ்டிரா,குஜராத், அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்கம் மட்டுமே. இதில் பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களே பெரும்பான்மையானவை.

இந்த மாநிலங்களில் சட்டவிரோத துப்பாக்கியுடன் நகர்வலம் வருவதற்கும், தேசிய நெடுஞ்சாலைகளில் செல்லும் வாகனங்கள் மீது துப்பாக்கிச் சூடு நிகழ்த்துவதற்கும், அச்சுறுத்தி சோதனை செய்வதற்கும் ஹிந்து அமைப்பினருக்கும், பசு பாதுகாவலர்களுக்கும் முழுமையான அனுமதியை ஏதும் உள்துறை அமைச்சகம் வழங்கியுள்ளதா என்ற கேள்வி எழுகிறது" என்கிறது அவரது பதிவு.

ஃப்ளாஷ்பேக்

முனைவர் மா.கண்ணதாசன்

முரசொலியில் எழுதிய கட்டுரைகள்!

2012-ஆம் ஆண்டு வரை முரசொலியில் நான் எழுதிய 32 கட்டுரைகளை தொகுத்து நூலாகக் கொண்டு வந்தேன். அதன் முதல் பிரதியை, அண்ணா அறிவாலயத்தில் தலைவர் கலைஞர் அவர்களிடம், காண்பித்து மகிழ்ந்தபோது எடுத்த படம்.

- முனைவர் மா.கண்ணதாசன், தொ.மு.ச. அகில இந்திய பொருளாளர், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

மலரும்நினைவுகள்

'காகிதப் பூ' நாடகம்!

1966-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 16, 17, 18 தேதிகளில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளையொட்டி, பல்லாயிரம் பேர் கலந்துகொண்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மூன்றாவது நாள் விழாவில், கலைஞர் எழுதிய 'காகிதப் பூ' நாடகம் அரங்கேறியது. அந்த விழாவின் மூலம் தேர்தல் நிதியாக 67 ஆயிரம் ரூபாய் திரட்டினார், அன்று கழகப் பொருளாளராக இருந்த கலைஞர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131